**<u>Småsteg பற்றிய தகவல் கடிதம்.</u>**

படிப்படியான ஆரம்பக்கல்வி

அன்பான பெற்றோர்களுக்கு!

முன்பள்ளி ஆண்டுகள் மிகவும் முக்கியமானதாகும். பாடசாலை தொடக்கத்துக்கு உங்களது பிள்ளைகளை முடிந்தவரை தயார்ப்படுத்த நாங்கள் உதவிசெய்வோம். பாடசாலையில் வெற்றி அடைவது என்பது தனியாக கல்வித்துறையில் வெற்றி அடைவது என்று நாம் கருத்தில் எடுத்துக் கொள்ளக்கூடாது. பாடசாலையில் எப்படிக் கற்றுக்கொள்கிறோம். நாம் எப்படி மற்றவர்களுடன் இணைந்து செயற்படுகிறோம் என்பது பற்றியதாகும். நாங்கள் Småstegக்கை இதற்கு பயன்படுத்துவோம். அதாவது Småstegக்கை படிப்படியாக ஆரம்ப பாடசாலையில் உபயோகிப்பதன் மூலம் பிள்ளைகள் பின்வரும் முக்கியமான திறன்களைக் கற்றுக்கொள்கிறார்கள்.

Småstegக்கை பயன்படுத்துதல் மூலம் மாணவர்கள் பின்வரும் நான்கு பிரிவுகளில் தங்கள் திறமைகளை வளர்த்துக்கொள்கிறார்கள்.

**கற்றல் திறன்**; இது பிள்ளைகளைகளின் கற்கும் திறனை மேலும் வளர்த்துக்கொள்ள உதவுகிறது. அவர்கள் நுணுக்கமாக விடயங்களை கவனிக்கும் தன்மையிலும் வளர்ச்சி அடைகின்றனர். இதன் மூலம் ஒருமுகப்படுத்தப்பட்ட சிந்தனை மேம்படுகிறது. ஆகவே அவர்கள் தங்கள் திறனை மேலும் வலுப்படுத்துவதுடன், உதவி தேவைப்படும்போது உதவியைக்கேட்கவும் தெரிந்து கொள்கின்றனர்.

**புரிந்துணர்வு**: மாணவர்கள் தங்களுடைய சொந்த, மற்றும் மற்றவர்களின் உணர்ச்சிகளை புரிந்துகொள்கிறார்கள். மற்றவர்களின் முன்நோக்குச் சிந்தனைகளை ஏற்றுக்கொள்ளப் பழகிக்கொள்கிறார்கள்.

**உணர்வுகளைப் கட்டுப்படுத்தல்**: கவலைகள் மற்றும் கோபம் போன்ற உணர்வுகளை எவ்வாறு கட்டுப்படுத்திக்கொள்ள வேண்டும் என்றும் கற்றுக்கொள்கிறார்கள்.

**நட்பும், முரன்பாடுகளைத்தீர்த்துக் கொள்ளுதலும்**: சிறுபராய பிள்ளைகள் எப்படி நண்பர்களைப் பெறுவது, எப்படித் நண்பர்களைத் தக்கவைப்பது என்பதையும், நண்பர்களுடன் சேர்ந்து தங்களுக்கு இடையில் உருவாகும்

முரண்பாடுகளை உரிய முறையில் எப்படி தீர்த்துக்கொள்வது என்பவற்றையும் அறிந்துகொள்கிறார்கள்.

இந்த ஆண்டு உங்கள் பிள்ளைகள் பல விடயங்களைக் கற்றுக்கொள்ளப் போகின்றனர். அவர்களுக்கு உங்கள் உதவி தேவைப்படலாம். இந்த வருடத்தின் போது உங்கள் பிள்ளைகள் Småstegல் உள்ள வாரக்கருப்பொருள் கொண்ட விடயங்களை உள்ளடக்கிய அறிக்கையைப் பெற்றுக்கொள்வார்கள். இந்த அறிக்கையின் பெயர் Foreldrelenkene. நீங்களும் உங்கள் பிள்ளைகளும் சேர்ந்து செய்யக்கூடிய இலகுவான செயற்பாடுகள் பற்றி இதில் உள்ளடக்கப்பட்டிருக்கும். உங்கள் பிள்ளை எதைக் கற்கிறார்கள் என்று விளங்கிக்கொள்ள இது உங்களுக்குச் சந்தர்ப்பத்தை அளிக்கிறது. உங்கள் பிள்ளைகள் மேலும் பயிற்சி செய்யவும் சந்தர்ப்பமளிக்கிறது அத்துடன் உங்கள் பிள்ளைகளால் என்ன முடியும் என்பதையும் காட்டுகிறது.

Småsteg பற்றி உங்களுக்கு கேள்விகள் இருந்தால், தயவு செய்து தொடர்பு கொள்ளவும். எமது வேலைக்கு நீங்கள் தரும் ஆதரவிற்கு நன்றி தெரிவித்துக்கொள்ள விரும்புகிறோம். Småsteg கின் மூலம் அவர்கள் தங்கள் பாடசாலைவாழ்க்கைக்கு தங்களைத் தயார்செய்து கொள்கிறார்கள்.

நன்றி.

அன்புடன்.